பெரியவாளவாடி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.S.தேவராஜ் தலைவர்

ந.க.எண்.01/2023-24 நாள்: 13.03.2024

பொருள்: மனைப்பிரிவு நகர் ஊரமைப்பு துறை - திருப்பூர் மாவட்டம் - உடுமலைப்பேட்டை வட்டாரம் - பெரியவாளவாடி ஊராட்சி பெரியவாளவாடி கிராமம் - க.ச.எண். 132/2 -ல் 9028 ச.மீ பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிவு உட்பிரிவிற்காக தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியது - ஊராட்சியில் மனைப்பிரிவு உட்பிரிவிற்கு ஒப்புதல் வழங்குதல்- சார்பு

பார்வை: 1. நகர ஊரமைப்பு துறை இயக்குநர் திருப்பூர் அவர்களின் இணையதள விண்ணப்ப எண்.ROC No. ETGZAOFX Dt:15.11.2023

2. பெரியவாளவாடி ஊராட்சி தீர்மான எண்.09/2024 நாள்: 26.02.2024

பார்வை 1-ல் காண் கடித்தின்படி திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், பெரியவாளவாடி ஊராட்சி, பெரியவாளவாடி கிராமம் க.ச.எண். 132/2 -ல் 9028 ச.மீ பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நிபந்தனையின் அடிப்படையில் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் பெரியவாளவாடி ஊராட்சிக்கு சாலை அமைக்க பெரியவாளவாடி ஊராட்சி மன்ற தலைவர் பெயரில் கிரைய ஆவண எண்.14695/2023 -ன்படி தானக்கிரையம் வழங்கப்பட்டுள்ளது. நகர ஊரமைப்பு துறை இயக்குநர் திருப்பூர் அவர்களின் ROC No. ETGZAOFX Dt: 29.12.2023 ன்படி நிபந்தனைக்குட்பட்டு தொழில்நுட்ப வரைபடத்திற்கு பார்வை 2-ல் காண் பெரியவாளவாடி ஊராட்சி தீர்மான அங்கீகாரத்தின்படி ஊராட்சியின் ஒப்புதல் வழங்கி இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

S. Devaraj 13/03/2024

தலைவர் / தொழில் அலுவலர்
பெரியவாளவாடி ஊராட்சி,
உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம்.

13/3/2024

இணைப்பு:
மனைப்பிரிவு நிபந்தனைகள்

நகல்:
1. திரு.சந்திரன் த/பெ ராமலிங்கம்
கதவு எண்.22 வெங்கடேசா காலனி
பொள்ளாச்சி
2. நகர ஊரமைப்பு துறை இயக்குநர், திருப்பூர் மண்டலம்

ந்தனைகள்

1. திருப்பூர் நகர ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்களின் ம.வ/ந.ஊ(திம) எண்.346/2023 எண்ணிட்ட வரைபடத்தின்படி எல்லை கற்கள் பராமரிக்கப்பட வேண்டும்.

2. மனைப்பிரிவு உரிமையாளர் பெரியவாளவாடி ஊராட்சிக்கு அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.2007-ன் படி விதி 3-ன்படி பரிசீலனை கட்டணம் ரூ.1000/- மும் வளர்ச்சிக் கட்டணம் சென்ட்டிற்கு ரூ.500/- வீதம் 159 சென்டிற்கு ரூ.79500/- (ரூபாய் எழுபத்தி ஒன்பதாயிரத்தி ஐந்நூறு மட்டும்) ஊராட்சி பொதுநிதியில் (SNA) கணக்கில் செலுத்தப்பட்டது.

3. திருப்பூர் நகர ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்களின் ம.வ/ந.ஊ(திம) எண்.346/2023 எண்ணிட்ட வரைபடத்தின்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு ஒப்புதலையும் எவ்வித மாற்றம்/ விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6X4 அளவிலான நிரந்த தகவல் பலகை மூலம் பொது மக்களின் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்பட வேண்டும்.

4. மனுதாரர் பெரியவாளவாடி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றத் தீர்மான எண்ணும், நாளும் மனுதாரருக்கு ஒப்பந்தமான நாளும், எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

13/03/2024.

தலைவர் / தலைமைநிலுவலர்
பெரியவாளவாடி ஊராட்சி.
உடுமலை ஒன்றியம்.

13/3/2024